உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்.

சித்தாந்தம்.

தொகுதி ௨] 1919௵ ஜூன்௴ [பகுதி ௬.

தசபுராணம்.

நீடுயர் மண்ணும்விண்ணு நெடுவேலைகுன்றொ டுலகேழுமெங்கு நலியச்
சூடிய கையராகி யிமையோர் கணங்கள் துதியோதி நின்றுதொழலு
மோடிய தாருகன்ற னுடலம்பிளந்து மொழியாத கோபமொழிய
ஆடிய மாநடத்தெ மனலாடிபாத மவையா நமக்கோர் சரணே.

இ—ள். நீடுஉயர் = நீண்டு உயர்ந்த, மண்ணும் = பூவுலகமும், விண்ணும் = ஆகாயவுலகமும், நெடுவேலை = நீண்டசமுத்திரங்களும், குன்று ஒடு = மலைகளும், உலகுஏழும் = ஏழுவுலகங்களும், நலிய = வருந்த, இமையோர்கணங்கள் = தேவர்கூட்டம், சூடிய கையராகி = கூப்பியகையராகி, துதி ஓதி = துதிகளைச்சொல்லி, நின்று தொழலும் = நிலைபெற்று வணங்குதலும், ஓடியதாருகன் = மேற்சொல்லிய வண்ணம் வருந்தும்படிச்செய்து பின்னர் எதிர்நில்லாது ஓடிய தாருகாசுரனது, உடலம் = தேகத்தை, பிளந்தும் = இரண்டாகப்பிளந்தும், ஒழியாத = நீங்காத, கோபம் = இறைவனது கோபம், ஒழிய = ஒழியும்படி, ஆடிய = திருநடனஞ்செய்த மாநடத்து = பெரியநடனத்தைச் செய்கின்ற, எம் = எமது, அனலாடி = தீயினிடத்தேதிருத்தஞ்செய்த சிவபெருமானது. பாதம் = திருவடிகள், அவை = அவையே, நமக்கு ஓர் சரண் ஆம் = நமக்கு ஒரு அடைக்கலப் பொருளாகும், ஏ = அசை.

முன்னொருகாலத்துத் தாருகன் என்னும் அசுரனொருவன் நெடுங்காலம் பலவிததவங்கள்செய்து அனேக வரங்களைச் சிவபெருமானிடத்துப் பெற்று அவ்வரங்களின் வல்லமையால் யாரிடத்துந் தோல்வியடையாது ஏழுலகங்களிலுஞ்சென்று யாவரையும் வென்று தேவர் முதலியோரைத் துன்புறுத்துகின்றகாலத்தே அத்துன்பங்களுக்கு ஆற்றாராகியதேவர்முதலியோர் ஔரவ முனிவர் என்னும் முனிச்சிரேட்டரிடஞ் சென்று தங்களுக்கு உற்றதுன்பங்களை முறையிட்டுக்கூறினர். ஔரவ முனிவரும் தேவர்களை நோக்கி "இனி அசுரர் உங்களுக்குத் தோற்று, பின்னடைவர், நீங்கள் சென்று இப்போது அசுரரிடம் போர் புரியுங்கள்" என்று ஆசீர் வதித்தலும், தேவர்கள் அவ்வாசியை மேற்கொண்டு அசுரருடன் போரிடலும் அத்தேவர்கள் ஆற்றலுக்கு அசுரர்கள் எதிர்நில்லாது தோற்றுப்போயினர். அசுரர் தலைவனாகிய தாருகன் இனி பூமியில் இருப்போமாயின் கொல்லப்படுவோமென்று பயந்து, பறந்து செல்லக்கூடிய தனது பட்டணத்துடன் சமுத்திர நடுவில் சென்று இருந்துகொண்டு ஆங்குக்கப்பலோட்டி வருகின்ற மாலுமிகளையும், மனிதர்களையும் துன்புறுத்தி அவர்களது பொருள்களையும் கொள்ளையிட்டு வாழ்ந்து வருவானாயினன். இவ்விதம் வாழுநாள் ஒருநாள் சுப்பிரியன் என்பானொருவன் தனது கப்பலை யோட்டிவர, அவனைத்தடுத்துக்கப்பலிலுள்ள பொருள்களைக் கொள்ளைகொண்டு அச்சுப்பிரியன் என்பவனையும் சிறையிலிட்டனன். சிறைப்பட்ட சுப்பிரியன் சிறைச்சாலையில் இருந்தானாயினும் யார்க்குந்தஞ்சமாகும் சிவபெருமான் திருவடியையல்லது வேறொருபற்றுமில்லாதவனாய்த் தானிருந்த சிறைச்சாலையிலேயே சிவபூஜைசெய்துகொண்டு வந்தனன். வேண்டுவார் வேண்டுவதே ஈந்து, வேண்டுதல் வேண்டாமையிலானாகிய சிவபெருமான் அச்சுப்பிரியனுக்குத்தரிசனந்தந்து அவனது இடுக்கண் நீங்கும்படி அவனுக்குப் பாசுபதாஸ்திரமளித்து அசுரரிடத்தே யுத்தஞ் செய்யும்படி ஏவி யுத்தத்தில் அசுரர்கள் தோல்வியடைந்து இறக்கும்படிச் செய்ததுடன் அவ்வசுரர் தலைவனாகிய தாருகனையும் இருகூறாகப் பிளந்து இறக்கும்படிச் செய்து சிவப்பிரியனாகிய சுப்பிரியன் என்பானையும் மற்றைத்தேவர்களையும் காத்து அருள் செய்தனர் என்பது புராணமாகும்.

பத்திராதிபர்.

உ

சிவமயம்,

திருச்சிற்றம்பலம்.

திருவாரூர் நான்மணி மாலை.

தொகுதி-8, பகுதி 5, பக்கம் 118-தொடர்ச்சி.

நேரிசை வெண்பா.

தேங்குபுக ழாரூர்த் தியாகர்க் கெண்டிக்கு மொளி
வீங்குபகற் போது வெண்படமாந் — தூங்கிருள்சூழ்
கங்குற் பொழுது கரும்படமாஞ் செம்படமாம்
பொங்குற்ற புன்மாலைப் போது.

(இ-ள்-) தேங்கு = நிறைந்த, புகழ் = புகழினையுடைய, ஆரூர் = திருவாரூரின்கண் எழுந்தருளிய, தியாகர்க்கு = தியாகராயப் பெருமானுக்கு, எண் திக்கும் = அஷ்ட திக்குகளிலும், ஒளிவீங்கும் = பிரகாசம் அதிகரிக்கும், பகற்போது = பகற்காலமானது, வெண்படம் = வெண்மையாகிய வத்திரம், ஆம் = ஆகும் தூங்கு = அதிகரித்த (நெருங்கிய) இருள்சூழ் = இருளால் சூழப்பட்ட, கங்குற்பொழுது = இராப்பொழுது, கரும்படம் ஆம் = கரியவஸ்திரமாகும். பொங்கு உற்ற = மிகுந்த, புன்மாலைப்போது = சிறிய மாலைக்காலமானது, செம்படம் ஆம் = சிவந்த வத்திரமாகும்.

(கருத்துரை) இறைவன் திகம்பரன் ஆதலால் போதுகளை வத்திரங்களாக உவமித்ததுடன், சாத்வீகம், தாமசம், ராஜசம், ஆகியமுக்குணங்களும் தொழிற்படுங்கால் அந்தந்த முகூர்த்தத்திற்கு உண்டென்று குறிப்பித்ததே இச்செய்யுளின் கருத்து ஆகும்.

கட்டளைக் கலித்துறை.

"போதொன்றிய தண்பொழிற் கமலேசர் பொன்மார்பி லைந்தாய்
சூதொன்று கொங்கைச் சுவடென்பாரற் றெருள்களிற் றுரிவை
மீதொன் றுவகண்டு வெங்கோப மாமுகன் வெண்மருப்பா
லீதொன் றடுகளிறென் றெதிர்பாய்ந்த விணைச் சுவடே"

இ—ள். போது=புட்பங்கள், ஒன்றிய=பொருந்திய, தண்பொழில்=குளிர்ந்த சோலைகளையுடைய, கமலேசர்மீது = திருவாரூரிலெழுந்தருளிய சிவபெருமான் மீது, தொல்களிற்று உரிவை=பூர்வத்தில் தாருகவனத்து ரிஷிகளால் ஏவப்பட்ட யானையினது தோலானது, ஒன்றுவ = பொருந்தியிருப்பன, வெம்கோபமாமுகன்=கஜாசுரன், கண்டு=பார்த்து, ஈதுஒன்று அடுகளிறு-ஈதோர் கொல்லுகின்றயானை, என்று-என்றுஎண்ணி, வெண்மருப்பால்=வெண்மையாகிய கொம்புகளால், எதிர்பாய்ந்த=எதிர்பாய்ந்ததினாலாகிய, இணைச்சுவடு=இரண்டாகிய குறிகளை, எம்தாய்=எமது தாயாகிய உமாதேவியார், பொன்மார்பில்=மேருமலை போன்ற இறைவனது திருமார்பில், சூதுஒன்று-சூதுக்காய்களை யொத்தகண்களையுடைய, கொங்கை=முலைகளைபழுத்திய. சுவடு=தழும்பு, என்பர்=என்று கூறுவர் உலகோர். ஆல் ஏ-அசை.

(குறிப்பு) இவ்வாசிரியர் உமாதேவியார் கம்பாநதியின் பெருக்கால் அச்சங்கொண்டு பூசித்த பிருதிவிலிங்கத்தில் வளைத்தழும்பும்முலைத்தழும்பும், இருந்ததை இச்செய்யுளில் இவ்வாறு கஜாசுரன் பாய்ந்த வெண்மருப்பின் சுவடென்று உவமித்தாராயினும் கஜாசுரன் இறைவனது திருமார்பில் பாய்ந்து கொம்புகளின் குறிகளை உண்டுபண்ணினன் என்பதற்கு ஓர் புராண கதையும் கண்டிலேன் (ப—ர்)

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

இணங்குகமலால யமாலிதயத்திற் பொலிந்த தியாகேசரம் பொற்
கணங்குழை மண்மகளிதய கமலத்தும் பொலிதலினக்கமலமான
மணங்கமழ் பங்கயத்தடஞ் சூழ் கமலைகமலாலயப் பேர்வாய்த்த தான்மற்
றணங்களையாரிதய முந்தம்மருட் கொழுநரிதயமு மொன்றுகுந்தானே.

இ-ள்.— இணங்கு=பொருந்துகின்ற கமலம்=கடனீரை, ஆலயம்=இடமாகக்கொண்ட, மால் இதயத்து=விஷ்ணு மூர்த்தியின் இதயத்தில், பொலிந்த=எழுந்தருளிய. தியாகேசர்=தியாகராஜப் பெருமான், அம்பொன்=அழகிய பொன்னாலாகிய, கணம்குழை=கூட்டமாகிய மணிகளழுத்திய காதணியையுடைய, மண்மகள்=பூதேவியினது, இதயகமலத்தும்=இருதயதாமரையிலும், பொலிதலின்=விளங்குதலால், அக்கமலமான=அத்தாமரையையொத்த, மணங்கமழ்=வாசனைவீசும், பங்கயத்தடஞ்சூழ்=தாமரைக்குளங்கள் சூழ்ந்துள்ள, கமலை=திருவாரூரானது, கமலாலயப் பேர்வாய்த்ததால் = கமலாலயம் என்னும் பேரை அடைந்ததால்

அணங்கு அனையார்=தெய்வமகளிரை யொத்த பெண்களினது, இதயமும்=மனமும் தம்அருள்கொழுநர்=தமக்கு அருளால் கிடைத்த நாயகரது, இதயமும்=மனமும், ஒன்றுஆகும்=ஒருதன்மைத்து ஆகும், மற்று, ஏ. அசை. திருமால் இதயத்தில் எழுந்தருளிய தியாகராஜப்பெருமான் மண்மகளிதயத்திலும் விளங்குதலால் தாமரைத் தடாகங்கள் சூழ்ந்த திருவாரூர் என்னுந் தலத்துக்கு திருவொடுங்கும் இடம்என்னும்பெயர் திருமாலின்பெயர் வாய்த்ததாகையால் அத்திருவாரூரின்கண் தோன்றும் மாதர் இதயமும் அவர்கொழுனரிதயமும் இரண்டாக இராது ஒன்ருகும். என்று வியந்து ஓதியதால் திருவாரூர் கற்புடை மகளிர்க்கு ஓர் இடம் என்பது போந்த பொருளாயிற்று.

நேரிசை யாசிரியப்பா.

தானமால் களிறு மாநிதிக் குவையு
மேனைய பிறவு மீதூ ரீக
நலம்பாடின்றி நாண்டொறுந் தொரீஇ
யிலம் பாடின்றி யேற்குந ரேற்க
புரவலர் புரத்தலு மிரவல ரிரத்தலு
மிருவே றியற்கையு மிவ்வுல குடைத்தே

அதான்று

ஒருகாலத்தி லுருவ மற்றொன்றே
யிடப்பான் முப்பத் திரண்டறம் வளர்ப்ப
வலப்பாலிரத்தன் மாநிலத்தின்றே
விண்டொடவந்த வியன்றுகிற் கொடிகள்
மண்டலம் போழ்ந்து மதியக டுடைப்ப
வாணிலா வமுதம் வழங்கியக் கொடிகள்
வேனிலிற் பயின்ற வெப்பமதாற்றுபு
கொடியா ரெத்துணைக் கொடுமை செய்யினு
மதியார் செய்திடு முதவியை யுணர்த்தும்
பன்மணிமாட்ப் பொன்மதிற் கமலைக்
கடிநகர் வைப்பினிற் கண்டேம்
வடிவ மற்றிது வாழியபெரிதே

(இ-ள்.) தானம் மால்களிறு=மதமயக்கங்கொண்ட யானையினையும், மாநிதிக்குவையும்=பெரிய செல்வக்குவியலும், ஏனையபிறவும்=

இவை நீங்கலாகிய மற்றைய செல்வங்களும், ஈகுனர்=யாசகர்களுக்குக் கொடுப்பவர், ஈக= கொடுக்கக்கடவர், நலம்பாடுஇன்றி=நலங்கெடாது, நாண்துறந்து ஒரீஇ=நாணமற்று, இலம்பாடுஇன்றி = இலமென்பதைக்கொள்ளாமல் ஏற்குனர்=பிச்சையெடுப்பவர், ஏற்க=பிச்சையெடுக்கக்கடவர், புரவலர்=காக்கின்றவர்கள், புரத்தலும்=காத்தலும், இரவலர்=யாசகர். இரத்தலும்=யாசித்தலும், இருவேறு இயற்கையும்=இருவிதமாகிய தன்மையும், இவ்வுலகு=இவ்வுலகத்தினிடத்தே உடைத்து=உள்ளதுஆகும், அதுஅன்று=அதுவல்லாமலும், ஒருகாலத்தில்=ஒரேகாலத்தில், உருவம்ஒன்றே = ஓர்உருவமே, இடப்பால் = இடப்பக்கத்தில், முப்பத்து இரண்டுஅறம்=முப்பத்திரண்டுதருமங்களை, வளர்ப்ப=வளர்த்தலும் வலப்பால்=வலதுபக்கத்தில், இரத்தல்=பிச்சையெடுத்தலும், மாநிலத்து=இப்பெரியஉலகத்தில், இன்றே=இல்லையே, விண்தொட=ஆகாயத்தைத்தொட, நிவந்த=மேல்எழுந்த, வியன் துகில்கொடிகள்=விரிந்ததுகிற்கொடிகள், மண்டலம்போழ்ந்து=ஆகாயவீதியைப்பிளந்து மதிஅகடுஉடைப்ப=சந்திரன்நடுவைஉடைத்தலும், வாள்நிலா அமுதம்=வெளிதங்கிய சந்திரிகையோடுகூடிய அமுதத்தை, வழங்கி=கொடுத்து, அகொடிகள்=அந்தக்கொடிகளானவை, வேனிலிற்பயின்ற = வெயிலில்இருந்த, வெப்பம் அது ஆற்றுபு=வெப்பத்தைத்தணித்தல், கொடியார் எத்துணைகொடுமைசெய்தும்= கொடியவர்கள் எத்துணைக்கொடுமைகளைச்செய்தும், மதியார்செய்திடும்=அறிவுடையார்செய்கின்ற' உதவியைஉணர்த்தும் பல்மணிமாடம்=பலவாகியமணிகளாலாகிய மாடங்களையும், பொன்மதில்=பொன்னாலாகியமதில்களையும், உடைய, கமலைக்கடிநகர்வைப்பினில்=திருவாரூராகிய காவல்தங்கிய பட்டினத்தில், கண்டேன்=பார்த்தேன், வடிவம்இது=இவ்வடிவமானது, பெரிதுவாழிய=மிகுதியும் வாழ்க்கடவது, ஏ-அசை

"கொடியார் எத்துணைக் கொடுமைசெய்யினும் மதியார் செய்திடும் உதவியையுணர்த்தும்" என்னுமடிகள் சிலேடையாகக் கொடியவர்கள் எத்தனைகொடுமையைத் தமக்குச்செய்தாரேனும் அறிவுடையோர் அக்கொடுமையைச் சிறிதும்நினையாது தம்மாலாகிய பெரியதோர் உதவியைத் தாம் இடையூறுண்டும் செய்வரென்பதாயிற்று.

"ஒருகாலத்தி லுருவமற்றொன்றே
யிடப்பான் முப்பத்திரண்டறம் வளர்ப்ப
வலப்பாலிரத்தல் மாநிலத்தின்றே"

'என்றமையால் இடப்பாகத்து எழுந்தருளிய பிராட்டியினது அறம் வளர்க்குந் தன்மையினையும் அவ்வம்மையாரை இடப்பாகத்துத் தாங்கி வலப்பால் உள்ளபெரியோனாகிய இறைவன் தாருகவனத்து ரிஷிகளின் பொருட்டு லீலாமாத்திரமாக இரத்தலும், விளக்கி நிற்கின்றது.

பத்திராதிபர்,

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

* முப்பொருள் ஆராய்ச்சி.

ஜலத்தைப் பானம் பண்ணினபேர்க்குத் தாகந் தணிந்ததுபோல் ஆசாரியர் சரித்திரத்தைப் படித்து ஏற்றக்குறைவான வசனங்களைத்தள்ளி உண்மை வசனங்களையறிந்து போதித்தாற் பக்குவான்மாக்களுக்கு ஞான முண்டாம். சுருதி- சுவாநுபவ ஆ ௯. இதிற் சுருதி முதன்மையோ குரு வாக்கு முதன்மையோவெனில் சுருதியிலே பொய்யாகவு மெய்யாகவுஞ் சொல்லியிருக்கையாலே சுருதிக்கு முதன்மைகூடாது. இனி குருவானவர் கிரியைத்தொழிலில் நிற்கிறவனைச் சரியைத் தொழிலிலே நிருத்தப்படா மையாற் குருவுக்கு முதன்மை கூடாது. ஆகையினாற் சுவாநுபவமே முத ன்மை. இந்தச்சுவானுபவத்திற்குச் சுருதியுங் குருவாக்குங் கருவியாகிய சகாயமென்றறிக. வியாபகம், வியாப்பியம் வியாத்தி இதில் வியாபகம் கடல்போல. வியாப்பிய மதில்நின்ற சலம்போல. வியாத்தியுப்பு நீருங் கலந்து நின்றதுபோலவாம். இச்சிவன் வியாபகம். அதனுள் ஆன்மா வியாப்பியம், மலமும் ஆன்மாவுங்கலந்து நிற்றல் வியாத்தி. இனியான்மா வுக்கு வியாதியாவது ஆணவமலமேயாம். மருந்தாவது தீட்சையேயாம். பத்தியமாவதற்கேற்ற வனுட்டிப்பேயாம். பரிகாரி ஞானாசாரியரே யாம்.

ஆன்மா தனித்திராது. ஆகாசமும் படிகமும் ஒருகாலும் தனித்திரா மல் கண்போல இருளோடும் ஒளியோடுங் கூடிக்கொண்டிரு

---

* இது கையேட்டுப் பிரதியிலிருந்து அச்சிடப்படுகிறது. (ப-ர்.)

மா சுதந்திரவீனன் கிஞ்சிக்ஞனன். சுதந்தரமுடைய வனென்ப தெங்கனமெனில் ஆன்மா தனியே யொன்றையு மறியாமையாலுந் தனியே தனுகரணபுவன போகங்களை யுண்டாக்கிக் கொள்ளாமையினாலும் சுதந்தரவீனனும். வினைகளை யீட்டிக்கொண்டமையால் யான்மா சுதந்தரமுடையவனும். இதற்குச்சிவனறிவித்த தெல்லாம் அறிய மாட்டாதபடியினாலே ஆன்மாகிஞ்சிக்ஞனேயாம். ஆதித்தன் வியாபகமாய் எண்ணிறந்த கண்களுக்குங்காட்டிக்கொண்டு நிற்கிறதுபோல சகல அண்டங்களிலேயும் சகல புவனங்களிலேயுமிருக்கிற எண்ணிறந்த வான்மாக்களுக்கு மறிவுந் தொழிலுமுண்டாயிருக்கையினாலே சிவன் சருவ வியாபகனேயாம். இனி இருளானது எண்ணிறந்த கண்களையும் பதார்த்தங்களையுந் தெரிய வொட்டாமல் மறைத்ததுபோல எண்ணிறந்த ஆன்மாக்களையுஞ், சிவனையறிய வொட்டாமல் மலம் மறைத்துக் கொண்டிருக்கையினாலே ஆணவ மலமும்வியாபகமே. அந்தந்தவூரிலே யிருக்கிறபெயர்களுக்கு (ஒரு ஊரிற்றானியம் ஒரு வூரிலேயே) அந்தந்த வூரிலே யிருக்கிற பலதானியங்களும் பொசிப்பாய் விடுகிறதுபோல சகலஅண்டங்களிலேயுஞ் சகல புவனங்களிலேயு மிருக்கிற வுயிர்களுக்குகெல்லாம் அங்கங்கே சுகதுக்கங்களிருக்கிறபடியினாலே கன்ம மலமும் வியாபகமேயாம்.

இனி குயவன் அந்தந்த வூரிலேயிருக்கிறஉயிர்களுக்கெல்லாம் பாண்டங்களை வனைந்துகொடுத்தல்போல எண்ணிறந்த அண்டங்களிலேயும் எண்ணிறந்த புவனங்களிலேயும் இருக்கிற வுயிர்களுக்குத் தனுக்கள் தனித்தனியேயுண்டாயிருக்கையால் மாயை வியாபகமேயாம். இனிக்கண்ணானது ஆதித்தியமண்டலஞ் சந்திரமண்டல மற்றுமுண்டாகிய கிரகங்களினுடைய மண்டலபரியந்தம் வியாபகமாயிருந்து காண்கிறதுபோலச் சகல வண்டங்களிலேயுஞ் சகல புவனங்களிலேயும் வியாபகமாய் போக்குவரவில்லாமலிருந்து அறிகையினாலே ஆன்மாவும் வியாபகமேயாம். பிள்ளைக்குப் பயித்தியம் பிடித்தால் அப்பிதாவானவன் அந்தப்பயித்தியத்தைத்தீர்க்கவேண்டுமென்று அவனுக்கு ஆசையாகிய நோய்பிடித்தால்போல ஆன்மாவுக்கு ஆணவமாகிய நோயாலே சரீரம் வந்தமையாலே அந்தமலநோயைத்தீர்க்கவேண்டுமென்று சிவனுக்கு ஆசையாகிய நோய் பிடித்தமையாலே அவருக்குந் திருமேனியுண்டாயிற் றென்றறிக. ஆணவமலத்திலே யிருக்கிற ஆன்மா சிவனை வெறுத்துக்கொண்டே யிருக்கும். அதெப்படி யெனில் பித்தம்பொருந்தின நாவுக்கு பால் கசந்தாற்போலே யாம். இனி ஆணவ

மலந்தீர்ந்த ஆன்மா சிவனை விரும்பிக்கொண்டேயிருக்கும். அதெப்படி போலவென்னில் பித்தந்தீர்ந்த நாவுக்குப் பால் இனித்தாற்போலேயாம். ஆன்மாவானவன் ஆணவமலமாகிய வூரிலேயிருந்து (அம்சு) லட்சம் யோனி பேதங்களாகிய மார்க்கத்திற்சென்று புண்ணிய பாவங்களினுலுண்டாகிய சுகதுக்கமாகிய கட்டமுதைப் புசித்து சிவஞானமாகிய வூரிலே சென்றிளைப்பாறிச் சிவானுபவமாகிய புசிப்பைப் புசித்துக்கொண்டு சுகமாயிருப்பன். அதுவெப்படியெனில் ஒருவன் வூரிலேயிருந்துப் புறப்பட்டு அங்கங்கே தங்கி காசிக்குப்போய் கங்கையிலே தீர்த்தமாடிச் சுகமாயிருந்ததுபோலவே யாம். சிவன் பெத்தான்மாக்களிடத்திலே பாலுக்குள் நெய்போலத் தோன்றாமல் நிற்பன். முத்தான்மாக்களிடத்தில் தயிருக்குள் நெய்போல வெளிப்பட்டு நிற்பன். வேத சிவாகமங்களினுடைய சத்தங்களெல்லாம் பால்போலவே யிருக்கும். அதினுடைய அர்த்தங்களெல்லாம் நெய்போலவே யிருக்கும்.

இனி பக்குவ ஆன்மாவானவன் தன்னுடைய அறிவாகிய மத்தினாலே அந்தப் பாலைக் கடைந்து அந்த நெய்யாகிய அர்த்தங்களை யெடுத்தனுபவிப்பன். பஞ்சகிருத்தியம் நித்தியமோ அநித்தியமோவெனில், சித்தியார் "உயிர்கட்கெல்லாம் விரிந்திடு மறிவுங்காட்டி வீட்டையு மளிப்பன் மேலோன்" என்ற திருவிருத்தத்தால் பஞ்சகிருத்தியம் நித்தியமே யாம். ஆன்மாக்களெடுத்த சரீரத்துக்குண்டான கன்மங்கள் பொசியாமல் ஒருகாலு மொழியா. இவனல்லாது கன்மம் ஒருகாலும் வாராது. ஆகையினாலே ஒருவருக்குந் துறவுகூடாது. நூல்களிலே துறவு சொல்லியிருக்கிறதற்கு அர்த்த மெப்படியெனில் யெல்லாப் பதார்த்தங்களிலேயுந் தான் கூடியிருக்கையிலுந் தன்னுடைய வறிவு அந்தப் பதார்த்தத்திலே வுபாதியாயிருக்கிறதே துறவென்றறிக. பிரளயாகலருக்குச் சரீரமில்லாமையால் அவருக்கு ஆணவமலம் தீரமாட்டாது. இனி இரண்டிற்கும் போக்கெப்படியெனில் பிரளயாகலருக்குச் சரீரம் இல்லையென்றது சகலருடைய சரீரம்போல மயக்குதவில்லாதபடியினாலே யாம். அவர்களுக்குச் சரீரம் நேர்மையாகவே யிருக்குமென்றறிக. விஞ்ஞானகலருக்குக் கன்மமும் மாயையுமில்லை யென்றது அவ்விரண்டினாலு மயங்குதவில்லாமையாலே யவர்களுக்குஞ் சுத்தமாயையிலே நேர்மையானசரீரமுங் கன்மமுமுண்டென்றறிக. இப்படியில்லாவிட்டா லிவ்விரண்டுபெயர்களுக்கும் ஆணவமலம் நீங்கமாட்டாது. சிவன் பஞ்சகிருத்திய மொருகாலும் பண்ணுகிறதில்லை;

சிவசத்தியே பஞ்சகிருத்தியம் பண்ணும். அதுவெப்படிவெனில் ஆதித்தி யனுக்குக் கிருத்தியமில்லாமல் ஆதித்த கிரணத்திற்கு கிருத்தியமுண்டா னதுபோல வென்றறிக. பாசஞானத்திற்குத் தொழில் ஆணவமல நீங்கு மளவுண்டு. பசுஞானத்திற்குத் தொழில் நின்மல துரிய மளவுமுண்டு.

சிவஞானத்திற்குத் தொழில் நின்மல துரியாதீத மளவு முண்டென வறிக. அஞ்ஞானியானவன் பாவத்தை வேசியைப்போலவும் புண்ணியத் தைக் கற்புடைய ஸ்திரீயைப்போலவும் நினைப்பன். இனி ஆணவமல நீங்கின ஆன்மாவானவன் புண்ணியத்தையும் பாவத்தைப்போலப் பொல்லாத தெனவறிந்து அந்த விரண்டையு நீங்கிநிற்பன். அதெப்படிபோலெனில் அது அத்துறவியானவன் கற்புடைய ஸ்திரீயையும் அருவருத்து வேசியைப் போல விட்டுவிடவென்றறிக. சருவான்மாக்களுக்கும் மோட்சத்திலே சிவானுபவம் ஒருப்படித் தல்லாமல் பலபல பேதமாகவே யிருக்கும். அதெப்படிபோலவெனில் சமுத்திரத்திற்குள்ளே நாழியுழக்கு மரக்கால் இவைகளை யமுக்கி முகக்க அவ்வவ்வளவே மொண்டு பேதமாய் நின்றது போலவென்றறிக. "தொண்டர் முகந்து துறையறியோமே யென்றார்" திருமூலர். பெத்தான்மாக்களுக்குத் தேகமே யான்மா போகமே மோக்ஷ மென்றறிக. சிவமும் சத்தியு மொன்றுபட்டு நிற்கிறதெப்படியெனில் மரமும் வயிரமும்போலவும் ஆதித்தனும் கிரணமும்போலவுமாம். ஒருவன் பயிரிட்டு ஆயிரங்கோட்டை நெல்லு கண்டபின்பு களஞ்சியத்திலே ஐந் நூறு கோட்டை கட்டி முன்னூறுகோட்டை உணவுக்குக் கட்டி யிருநூறு கோட்டைவிதைத்து யிருக்கையில் களஞ்சியத்திடை வைத்தது தீப்பற்றி யது. உண்ணவைத்தது உண்டு கழிந்தது. விதைத்தது தீய்ந்தது இவ் வாறுபோல ஆன்மாவுக்குப் பக்குவம்வந்த காலத்திலே சஞ்சிதகன்மமெல் லாம் ஞானாசாரியர் திருநோக்கால் வெந்துபோயிற்று. பிராரத்த கன்மம் எடுத்த சரீரத்திற் பொசித்துத் தொலைந்தது. ஆகாமிய கன்மம் சிவஞா னத்தினாலே மேலைக்கு வாராமல் நீங்கிபோயிற்று. இங்ஙனம் சஞ்சித மும் பிராரத்தமும் ஆகாமியமும் நீங்கின முறையறிக ஆன்மாக்களைத் தொகை பண்ணப்படாது. பிறப்பு இறப்பில்லை. நித்தியமாயிருக்கும். உயிர் ஆணவ மலத்துடன் கூடியேயிருக்கும். எப்படியெனில் அரிசிக்குத் தவிடுபோலவும் செம்புக்குக் களிம்புபோலவும் கடல்நீருக்கு உப்புப்போல வுமாம். ஆணவ மலம் உயிரை மயக்குவதெங்ஙனமெனின் குழந்தைப் பருவம் உயிரை மயக்குவதுபோலவும் பயித்தியமுயிரை மயக்குகிறது போலவும், கள், உண்டவனை மயக்குவதுபோலவும் ஆம். உயிரை ஆணவ

மலம் மயக்குவதால் வுயிருக்கு நல்வினை தீவினைகளிலே யாசை வரும். அதெப்படியென்னில் பசி உணவில் ஆசையை வுண்டாக்குவது போலவும் குருடு கோலிலே யாசையுண்டாக்குவதுபோலவும் பிணிமருந்திலே யாசையுண்டாக்குவதுபோலவும் ஆம். உயிருக்கு ஆணவமலங்கொடுத்த ஆசையைச் சிவபெருமானுணர்ந்து உயிர்க்குத் தனுகரண புவனபோகங்களை யிடைவிடாமல் மாற்றிக் கொடுத்துக்கொண்டே யிருப்பர். அதெப்படியெனில் வியாதியினாலே மருந்திலே யாசைப்பட்டபோது பண்டிதனறிந்து மருந்து கொடுப்பதுபோல வென்றறிக. இது உயிருக்கு அநாதியிலுள்ள செய்தி. எல்லா வுயிர்களுக்கு மிச்சையு மறிவுந்தொழிலும் எந்தக்காலமு மிடைவிடாமலே யிருக்கும். ஆணவ மலத்துடன் மாத்திரங் கூடியிருக்கிற வுயிர்களுக்கெல்லாம் விஞ்ஞானகலரென்று பெயர். ஆணவ மலத்துடனேயுங் கன்ம மலத்துடனேயுங் கூடியிருக்கிற வுயிர்களுக்கு எல்லாம் பிரளயாகலரென்று பெயர். ஆணவ மலத்துடனேயுங் கன்ம மலத்துடனேயும் மாயை மலத்துடனேயும் கூடியிருக்கில் வுயிர்களுக்கெல்லாஞ் சகலரென்று பெயர் ஆக வுயிரிலக்கண முற்றும்.

ஆணவமல மொன்றுயிருந்து எல்லா வுயிர்களுக்கும் நல்ல நினைவுகளை மறப்பிக்கும். பொல்லாத நினைவுகளை நினைவிக்கும். நல்ல சொற்களைச் சொல்லவொட்டாது. பொல்லாத சொற்களைச் சொல்லுவிக்கும். நல்ல தொழில்களைச்செய்ய செய்யவொட்டாது. பொல்லாத தொழில்களைச் செய்வித்துக்கொண்டே யிருக்கும். உயிர்க்குப் பிரயோசனமாயுள்ள காரியங்களை ஒரு காலத்துஞ் செய்யவொட்டாது. உயிருக்குக் கெடுதி வருகிற காரியங்களை யெந்தக்காலமு மிடைவிடாமல் செய்வித்துக்கொண்டேயிருக்கும். உயிரினுடைய நல்லறிவை யெந்தக்காலமும் இடைவிடாமல் கெடுத்துக் கொண்டே யிருக்கும். உயிருக்குப் பொல்லாத வறிவை யெந்தக் காலமு மிடைவிடாமல் கொடுத்துக்கொண்டே யிருக்கும் ஆணவமலம் முற்றும்.

கன்மம்.

கன்மம், நல்வினை தீவினை ஆ உ, மனம், வாக்கு, காயம், பசு, பதி, புத்தி பூர்வ நல்வினை யிப்படி யின்னம் பலவித முண்டு. தீவினையு மிவ்வாறும். நல்வினைகளுக்குப் பசுபுண்ணியமென்றும், பதிபுண்ணிய மென்று மிரண்டு பலன் வரும். தீவினைகளுக்குப் பசுத் துரோகமென்றும் பதித் துரோகமென்று மிரண்டு பலன் வரும்.

இனிப் புண்ணியங்களுக்குப் பலன் இன்பமேவரும். பாபங்களுக்குப் பலன் துன்பமேவரும். வினைகளுக்கெல்லாந்தூலகன்மமென்றுபெயர். இந்த வினைகளுக்குப்பிறகு பலனாகவருகிற புண்ணியபாவங்களுக்கெல்லாம் சூட்சமகன்ம மென்றுபெயர். இந்தப்புண்ணியபாவங்களுக்குப் பிறகு பலனாக வருகிற இன்பதுன்பங்கட்கு அதிசூட்சம கன்மமென்றுபெயர். இருவினைகளுக்கு மாகாமிய மென்றுபெய்யர். இருவினைப்பலனாகிய புண்ணியபாவங்களுக்குச் சஞ்சிதமென்றுபெயர். புண்ணிய பாவங்களுக்குப் பலனாகிய இன்பதுன்பங்களுக்குப் பிரார்த்தமென்றுபெயர். பயிரிடுகிறதுபோல இருவினைகள். பயிர்ப்பலனைக் களஞ்சியத்திலே கட்டிவைக்கிறதுபோல புண்ணிய பாவங்கள். கட்டிவைத்ததில் சிறுகச்சிறுக வெடுத்துண்கிறதுபோல இன்பதுன்பங்களை யனுபவிக்கிறது. இன்பதுன்பங்கள் தெய்விகத்தினாலேயும் வரும். பிறவுயிர்களினாலும் வரும். பஞ்சபூதங்களினாலும் வரும். ஆகமூன்றுந்தா னிச்சைப்பட்டு வருகிறதுமுண்டு. தானிச்சை படாமல் வருகிறதுமுண்டு. இச்சையானபடி வராமல் வேறொன்று வருகிறதுமுண்டு.

ஆ ௩. கன்ம இலக்கணமுற்றும்.

சுத்தமாயையிற் றோற்றம்.

சுத்தவித்தை, ஈசுரம், சாதாக்கியம், சத்தி, சிவம் ஆ ௫ தத்துவமும், சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி ஆ வாக்குள் நாலும் ஐம்பத்தொரு அட்சரமும் எண்பத்தொரு பதமும் எழுகோடி மகாமந்திரமும் இருபத்தெட்டு மூலாகமங்களும் இருநூற்றேழு பாகமங்களும் நாலுவேதங்களும் பதினெட்டுப் புராணங்களும் ஆறுசாத்திரங்களும் அறுபத்துநாலு கலைஞ்ஞானங்களும் சிவபேதங்களுக்கும் சத்திபேதங்களுக்கும் நாதவிந்து சதாசிவ மகேசுர ருத்திரபேதங்களுக்கும் விஞ்ஞானகலர் பிரளயாகலருக்கும் சரியை கிரியை யோகமுடையவர்களுக்கும் தனுகரண புவனபோகங்களும் நிவர்த்திகலை பிரதிட்டாகலை வித்தியாகலை சாந்திகலை சாந்தியதீதகலை ஆ ௫. இப்படிபோல வின்னமநந்தங் காரியங்களும் சுத்தமாயையிலேயிருந்து பிறக்கும். அதுவெப்படி போலவெனில் ஒரு பொற்கட்டியில் பலபல ஆபரணமும் ஒரு விரும்புக்கட்டியில் பலபல வாயுதங்களும் மண்ணிலே பலபல பாண்டங்கள் பிறக்கிறதுபோலவுமாமென்றறிக. சுத்தமாயையிற் றோற்றமுற்றும்.

அசுத்த மாயை.

அசுத்த மாயையிலே காலம் நியதி கலை வித்தை இராகம் புருடன் மாயை ஆக எ. பிரமாக்களும் தேவேந்திரர்களும் மகரிஷிகளும் நவக்கிரகங்களும் மற்றுமுள்ள சகலர்களுக்குத் தனுகரண புவனபோகங்களும்' பிரகிருதி மாயையிலே யிருந்த விருபத்துநாலு தத்துவங்களும் இப்படி போல வின்னமனந்தங் காரியங்களும் அசுத்தமாயையிலே யிருந்து பிறக்கும். அதெப்படியெனில் ஒருவிதையிலே பல கொம்பு, தழை, பூ, காய் கனிகள் பிறத்தல்போலவும் ஒரு நெல் விதையிலே பல நெல்லுகள் பிறப்பனபோலவும் ஒரு மேகத்தில் பல பிரிவுகளும் பலசத்தங்களும் பல விடிகளும் பலமின்களும் பலவிந்திர தனுக்களும் பிறத்தல்போலவு மென்றறிக.

அசுத்தமாயை முற்றிற்று.

பரமசிவம்.

அருவமுமல்ல வுருவமுமல்ல. மூன்று குணத்திலே யொரு குணமுமில்லை. ஒன்பதுநிறத்தி லொருநிறமுமில்லை. நாலுமலத்தில் ஒருமலமுமில்லை. உடம்பினுளுயிர்போலுயிரு ளுயிராயிருப்பன். போக்கு வரவுமில்லை. இழக்கப்படாத இன்பமாயிருப்பன். நம்பினபேருக்கு மோட்சங் கொடுக்கிறவன். மற்றவர்களுக்கு அவரவர் செய்கிற இருவினைப்பலன்களைக் கொடுக்கிறவன். எல்லா வுயிர்களுக்கும் பெரியவன். எல்லா வுயிர்களுக்குஞ் சிறியன். சகலத்தையுமறிகிறவன். சகலத்தொழில்களையுஞ் செய்கிறவன். சகல ஆன்மாக்களுக்கும் விரும்பினவற்றைக் கொடுக்கிறவன். எல்லா விடங்களிலும் நிறைந்திருக்கிறவன். இன்னுமிப்படி பலபல இலக்ஷணங்களை யுடையவன் சிவனை யொருவருங் காணமாட்டார். ஆகையால் உயிர்கள் கண்டு பூசைபண்ணும்படிக்குப் பலபல வுருவங்களை யெடுத்துக்கொண்டு பூசை முதலாகிய பணிவிடையுங் கொண்டருளி பணிவிடைக்குத் தக்கபலன்களையும் அளிப்பன் இவனுக்கு இச்சையு மறிவுந் தொழிலு மெந்தக்காலமு மிடைவிடாமலே யிருக்கும். பரமசிவன், பராசத்திசிவன், சத்தி, நாதம், விந்து, சத்தி, சதாசிவன் மனோன்மணி சத்தி, மகேசுரன் மகேசுரன் சத்தி, உருத்திரன் உமாசத்தி, மகாவிஷ்ணு லக்ஷுமிசத்தி, பிரமா சரஸ்வதி சத்தி ஆக சிவபேதம் அ. முட்டைப்பிறப்பு வேர்வைப்பிறப்பு விதைப்பிறப்பு, தோற்பைபிறப்பு ஆக ச. இந்த நாலு பிறப்பிலேயிருந்து விரிந்த பிறப்புக்கு வகை, மரப்பிறப்பு, ஊர்வனப்பிறப்பு, தெய்வப்பிறப்பு நீர்வாழ்பிறப்பு பறவைப்பிறப்பு, நாற்காற்பிறப்பு, மானுடப்பிறப்பு ஆக எ.

இந்த எழுவகைப் பிறப்பிலே யிருந்து விரிந்த பிறப்புவகை மரப்பிறப்பு வகைக்கு (௰௯-இலக்ஷம்) ஊர்வன பிறப்பு (௰௫ லக்ஷம்) தெய்வப் பிறப்பு பேதம் (௰௧-லக்ஷம்) நீர்வாழ் பிறப்புபேதம் (௰-லக்ஷம்) நாற்கால்பிறப்பு பேதம் ௰-லக்ஷம் (மனுஷப்பிறப்புபேதம் ௯ லக்ஷம் பறவைப்பிறப்பு பேதம் ௰லக்ஷம் ஆக பிறப்புபேதம் ௮௰௪-லக்ஷம் பேதமென்றறியவும். தனுவிலக்கண முற்றும்.

கரண விலக்கணம்.

புறக்கருவி கூடத் தொண்ணூற்றாறும் மாச்சரியம் (௧) அறதேஷணை (௧) புத்திரேஷணை (௧) லோகேஷணை (௧) தாரேஷணை ௧ ஆக சூட்சுமலோ கேஷணையைநீக்கி மற்ற நாலுங்கூட்டிக்கொள்ள ஆக தத்துவம் (௱) கரணம் முற்றும்.

புவன விலக்கணம்

முழம் பலகொண்டது வீடு. வீடு பலகொண்டது தெரு தெரு பல கொண்டது ஊர். ஊர் பலகொண்டது நாடு. நாடு பலகொண்டது தேசம். தேசம் பலகொண்டது கண்டம். கண்டம் பலகொண்டது உலகம். உலகம் பலகொண்டது அண்டம். இவைகள் ஒவ்வொன்று பல கூடியானவை. அண்டங்களுக்கு அளவு சொல்லமுடியா அது வெப்படிபோல, கீரை விதை எள்ளு அத்திவிதை இவை பிரமாணமுள்ளன, எண்ணப்படா. அது போல் அண்டங்களுக்குப் பிரமாணமுண்டு எண்ணித்தொகை கூட்டப் படா புவனமுற்றும்.

போக விலக்கணம்.

உயிருக்கு, பொன், மணி சஞ்சனம், மாலை, பெண்முதலிய பொருள் களில் விருப்பமாகவும், புலி பாம்பு தேள் வியாதி முதலியவற்றில் வெறுப் பாகவுமிருக்கும். இந்த விரண்டு வகைப் பதார்த்தங்களுக்கு மெண்ணில்லை. தொகையில்லை. ஆயினுஞ் சத்த பரிச ரூப கந்தங்களில் அடங்கியிருக்கும். இனிச் சத்தமாவது விருப்புச் வெறுப்புச் சத்தமென இரண்டுவகைப்படும். இப்படி மற்ற நான்கினுக்கு மெட்டுவகையாகக் கண்டுகொள்க. ஆக ௰. வகையிலே ஒவ்வொன்று அளவிறந்ததாக வரும். இப்படி யளவிறந்ததாக விருந்தாலு மின்பதுன்ப மிரண்டுக்கு மேதுவாகவே வரும். போகங்கள் வருகிறதெல்லா மின்பதுன்பமிரண்டேதுக்களைக்கொண்டு அநுபவிக்கிறதே யல்லாமல் மூன்றுவதநுபவ மொரு சந்தர்த்திலுமில்லை.

போகம் முற்றிற்று.

சிவபுண்ணியம்.

அபுத்திபூருவம், புத்திபூருவம், உபாயசரியை, உபாயகிரியை, உபாய யோகம், உபாய ஞானம், உண்மை சரியை, உண்மை கிரியை, உண்மை யோகம், உண்மை ஞானம் ஆக ௰.

இதிலொன்பது சிவபுண்ணியமு மிவனுகச்செய்து முடித்த பின்பு பரமசிவன் ஞானுசாரியனுக வெழுந்தருளி வந்து உண்மை ஞானமென்கிற சிவபுண்ணியத்தைக் கொடுப்பன். அந்த ஞானமொன்றும் பத்துவிதமாக விருக்கும் மிதற்குவகை தத்துவ ரூப முதலிய (௰) க்கு (க) தையும் உயிரு ண்டு கழிப்பன். சிவயோக மொன்றை மாத்திரம் எந்தக்காலமும் கண்டு கொண்டேயிருப்பன் ஒருகாலுந் தள்ளமாட்டான் இதற்குமேல் உயிருக்குப் பிரயோசனமொன்றுமில்லை "காயமே தானுய் கருதுவிக்கும் வஞ் சத்திற் ரேய்வே நெஞ்சைத் துணிவிக்கும், நேயமா மீசனையே நெஞ்சி லிருப்பிக்கும் கையா பால வாசமே யாக்குமலம்". (பாசஞானம்) உட் பொருள் உள்ளில் பொருள், இல்பொருள் குடிலை சுத்தமாயை யிரண்டு மொன்று ஆக மெய்ப்பொருள் (ரு) அழிபொருள் (ச) பொய்ப்பொருள் பல ஞ தறு ஆன்மா ஞானம், ஆன்மாவினுடைய குணம் ரேயம், அறி யப்படும்பொருள் "ஏகன் அனேகனிருள் கருமம் மாயை யிரவுண்டாக விவையாறுதியில்" ஏகனென்று சிவன் அனேகனென்பது ஆன்மா இருள் என்பது ஆணவமலம், கருமமென்பது கருமமலம், மாயையிரண்டெ ன்பது சுத்தமாயை அசுத்தமாயையும் இவ்வாறு பொருளு மொருகாலத் திலே யுள்ளனவல்ல அனுதியிலே யுள்ளனவாம் இவ்வாறு பொருளையும் திரிபதார்த்தத்து ளடக்கித் திரிபதார்த்தமாய்ச் சொல்லுதலாம். ஏகனுகிய சிவனுக்கு எண்ணிறந்த தன்னியல்புக் குணமுண்டு. அதிலே யிரண்டு குணஞ் சொல்லுகிறேம். அதேதெனில் ஒருவருமறியாமல் தானே யறி கிற குணமொன்று. ஆன்மாக்களுக்கு அறிவிக்கிற குணமொன்று. ஆக உ.

இதற்கு வசனம் சித்தியார் ஐந்தாஞ்சூத்திரத்தில் "பொறி புலன் கரணமெலலா" மென்ற திருவிருத்தத்தில் 'அறிதருஞ் சிவனேயெல்லா மறிந்தறிவித்து நிற்பன்' என்றது அனேகனுகிய ஆன்மாவினுக்கு எண் ணிறந்த தன்னியல்புக் குணமுண்டு. அதிலே யிரண்டுகுணஞ் சொல்லு கிறேம் அதேதெனில் அறிவித்தா லறிகிற குணமொன்று. பிறருக்கு அறிவிக்க மாட்டாத குணமொன்று ஆக உ.

இதற்குதாரணம்: சிவஞானபோதம் "அறிவிக்க வன்றி யறியா வுளங்கள்" என்ற தயிராகிய வாணவ மலத்திற்கு மெண்ணிறந்த தன்னியல்புக் குணமுண்டு அதிலே யிரண்டு குணஞ்சொல்லுகிறோம். அதேதெனில் ஆன்மாக்களுக்கு வேண்டுங் காரியத்தை மறைக்கிற குணமொன்று, வேண்டாதகாரியத்தில் விருப்பத்தைக் கொடுக்கிற குணமொன்று, ஆக உ.

இதற்குதாரணம்: சிவப்பிரகாசம் "அன்னியமானவை யுணர்த்தி யன்னியமாய் நிறைந்த வறிவறியாமையினு" மென்றது, கரும மலத்திற்கும் எண்ணிறந்த தன்னியல்புக் குணமுண்டு அதிலே யிரண்டுக்குணஞ் சொல்லுகிறோம் அஃதேதெனில் ஆன்மா ஆணவமலத்தைப் பொருந்தினால் ஆணவமலமாய்ப் போகிற குணமொன்று. சிவத்தைப் பொருந்தினால் சிவமாய்ப் போகிற குணமொன்று ஆக உ மாயைக்கு மெண்ணிறந்த தன்னியல்புக் குணமுண்டு அதிலிரண்டு குணஞ்சொல்லுகிறோம். அஃதேதெனில் ஆன்மா மலத்தைப் பொருந்தினால் மலமாய்ப் போகிற குணமொன்று சிவத்தைப் பொருந்தினால் சிவமாய்ப் போகிற குணமொன்று. ஆக உ. இநத விரண்டிற்கும் வசனம் "மாயை மாமாயை மாயா" என்ற திருவிருத்தம். இது தன்னியல்பு ஆன்மா அனாதியிலே ஆணவ மலத்தைப் பிடித்தால் ஆணவமல மான்மாவுக்குக் கன்மத்திலே விருப்பத்தைக்கொடுத்து அந்தந்தச் செய்தியை கர்த்தா வீரியத்தினாலே விருப்பத்துக்கேற்ற தனுவைக்கொடுத்து அந்தத் தனுவினிடமாகக் கன்மத்தைக் கூட்டிப் பொசிப்பித்தார், இது அனாதியிலே பிரபஞ்சமுண்டான முறைமை. இது பொது வியல்பு,

ஆன்மாவிற்கு ஆணவமல மியற்கையோ செயற்கையோ? இயற்கையானால் பாலுக்கு வெளுப்பும் கரிக்கு கருப்பும் ஒரு காலத்தும் நீங்காதது போல ஆன்மாவுக்கு ஆணவமல மொரு காலத்துநீங்காது. ஆகையா லியற்கையன்று செயற்கையானால் வெண்புடைவைக்கு அழுக்கேருவது போல மோக்ஷத்திலேயும் வந்து பொருந்தும், ஆகையினாலே செயற்கையு மன்று. இனிச் சித்தாந்தமெப்படியெனில் நெல்லுக்குமியும செம்புக்குக் களிம்பும்போல அனாதிசெயற்கை அனாதி சையோக மென்றலுமாம் இதற்கு வசனம் 'நெல்லிற்குமியுந் நிகழ்செம்பினிற்களிம்பும்" என்றது ஆன்மாவுக்கு ஆணவமலத்தைக் கர்த்தா கூட்டினாரோ மலந்தானே வந்து பிடித்ததோ? கர்த்தா கூட்டினாரானால் குற்றமுண்டு நிர்மலமாய்ச்

சருவானுக்கிரகராகையினாலே கர்த்தா கூட்டினதன்று. ஆணவமலஞ் சடமாகையினாலே தானே வந்து பிடிக்கமாட்டாது, இனிச்சித்தாந்தமெப்படியெனில் ஆன்மா ஆணவமலத்தைப்பிடித்தானென்றறிக. இதற்கு வசனம் எண்ணரிதாய் நித்தமாயிருண் மலத்துளழுந்தி, என்றது. ஆன்மாவுக்குச் செய்தியுண்டோவில்லையோ ஆன்மாசுதந்தரவீனனாகையினாலே சிவனுக்கே செய்தியல்லாமல் யான்மாவுக்குச் செய்தியில்லையென்றாலான்மாவுக்கு நரகதண்டனை வேண்டுவதில்லை. ஆன்மாவுக்கு நரகதண்டனை யுண்டாயிருக்கையினும் வேதாமங்களில் விதிவிலக்குகள் சொல்லப்பட்டிருக்கிறபடியாலும் ஆன்மாவுக்குச் செய்தியுண்டு. இதற்கு வசனம், அருளினாலுரைத்த நூலின் வழிவாராததன்மஞ் செய்யின், என்றது ஆன்மாவுக்குக் கன்மத்திலேயுண்டாகிய விருப்பம்சிவன் கொடுத்த விருப்பமோ ஆன்மாவுக்குள்ள விருப்பமோ, சிவன்கொடுத்தவிருப்பமானால் ஏன்பாவத்தைச்செய்தாயென்று நரகத்திலிட்டு வருத்தவேண்டுவதில்லை, தண்டிக்கையால், சிவன்கொடுத்த விருப்பமன்று. ஆன்மாவுக்குள்ள விருப்பமானால் நல்லதிருக்கத் தீயதைச்செய்து நரகத்திலே போகையினாலே ஆன்மாவுக்குண்டாகிய விருப்பமன்று. இனிச் சித்தாந்தமெப்படியெனில் ஆணவமலமே யான்மாவுக்குக் கன்மத்திலே விருப்பத்தைக் கொடுத்தது. ஆணவமலஞ் சடமாகையால் ஆணவ மலத்திற்குச் செய்தியில்லையென்றால் விஷம், கல்லு, பாஷாணம், காற்று. தீ, நீர் முதலிய சடங்குகளுக்குச் செய்தியுண்டானாற்போல ஆணவமலமாகிய சடத்துக்கும் செய்தியுண்டு. ஆகையினாலே யாணவமலமே யான்மாவுக்குக் கன்மத்திலே விருப்பத்தைக் கொடுத்தது. விருப்பத்தைக்கொடுத்த ஆணவமலமும் ஆன்மாவுக்குக் கன்மத்தை யறிந்தெடுத்துக் கொடுக்கமாட்டாது. விரும்பிய ஆன்மாவுங் கன்மத்தை யறிந்தெடுத்துப் பொசிக்கவுமாட்டான். விரும்பப்பட்ட கன்மமும் ஆன்மாவை யறிந்து வந்து பொருந்தமாட்டாது.

(இன்னும் வரும்)

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ மெய்கண்ட மயம்.

சகலசாஸ்திர நிர்ணய சங்கிரகம்.

தொகுதி-8-பகுதி-5-பக்கம்-113 தொடர்ச்சி.

நமஸ்காரம் கேசவனையே யடையுமென்று சொல்லுகிறவசனத்திற்கு போக்கேதென்னில் அந்த வசனம் சுருதி வசனமல்லாத படியினாலே பூர்வபக்ஷ வசனமேயல்லாமல் சித்தாந்தமல்ல. அதற்குப் பிரமாணம் நாராயணர் சிவனை நோக்கி வெகு வந்தனம்பண்ணி யிருக்கிறாரென்று சகல புராணங்களிலும் பாரதம் துரோணபர்வம் அனுசாசனிக பர்வம் முதலானதிலும் சொல்லுகிறதினாலே நாராயணர் வந்தனம் பண்ணப்படுகிறமூர்த்தி சாம்பசிவனென்றறிக. ஆகையாற் சர்வதேவ நமஸ்காரத்துக்கு சிவனிங்கலாகவென்றே கொள்க அதற்கு திட்டாந்தம் "சர்வோ சரணும் லவணம் பிரதான" மென்றால் பாலுக்கு பிரதானமல்லவே. ஆகையாற் சர்வ சத்தத்துக்கு பிரமாதி தேவதைகளை பண்ணின வந்தனம் கேசவனையே யடையுமென்று கொள்க அந்த கேசவனார் சதாகாலமும் வந்து வந்தனம் பண்ணப்படுகிற மூர்த்தி சாம்பசிவனே. அந்த சிவனுடைய சத்தி, விட்டுணு, பிரமாதிகளிடத்திலிருக்கையால் உலகத்தில் அவர்களுக்கு வந்தனம் நடக்கிறது. பத்தாவது சர்வ நமக்கிருதலக்ஷண முற்றும்.

பதினோராவது சூரியமண்டலத்தில் பிராமணர் மந்திரத்தால் உபாசியரென்கிற லக்ஷணம். பதினொன்றாவது சூரியமண்டலத்தில் பிராமணாள் உபாசியரென்று சகல சாஸ்திர நிர்ணயம். அது சாம்பசிவனே- அதற்குப் பிரமாணம் இரண்டாம்வேதம் ஆரண்ணியத்திற் சூரியனை வெகுவாய் துதித்து அவருடைய நடுவிற் பொன்மயமாக புருடனிருப்பர். அவர் பூதபதியென்று சொல்லி மேல்வாக்கியத்திற் சிவனை பொன் மயரென்றும் பொன்னிறவாகுவென்றும் புருடனுருத்திரனேயென்றும் சொல்லி பூதபதியென்ற நாம சுருதிகளும் நிகண்டுகளு மிவருக்கே சொன்னபடியினாலும்

சுக்கிலயசுரும், மயித்திராயண உபநிடதமும் மற்றுமுள்ள சுருதி பிரமா
ணத்தினாலும் சூரியமண்டல அந்தரவிர்த்தி சாம்பசிவனே யாய்க்கியவற்
கமிருதி, மாதவமிருதி முதலான மிருதிப்பிரமாணத்தினாலும் கூர்மம் காந்
தம் சைவம் இலிங்கம் முதலான மூலபுராணத்தினாலும் சூரிய உபபுராண
த்திற் சூரியமண்டல நடுவிலிருக்கிறவர் அந்தரவிர்த்தி சாம்பசிவனென்றே
நிர்ணயம். ஆகையாற் சர்வ தரிசிபோதாயனரும் சூரியமண்டலம் அப
யாசகரென்றும் அவர் சங்காரத்துக்கு வைத்தியரென்றும் நீலகண்ட விரு
பாக்ஷ நாமி சிவமயமேலயமென்றுஞ் சொல்லுகிறதினாலும் சூரியமண்டல
மதிதேவதை தேவியென்றும் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி சனி
ராகு கேது முதலான மண்டலத்துக்கு அதிதேவதை சுப்பிரமணியர்,
நாராயணர், பிரமதேவர், இந்திரன், எமன், காலனக்கினி முதலான தேவ
தைகளை அதிதேவதைகளாகவும் சொன்னார். இராமாயணத்தில் உத்தர
காண்டம் ஆதித்த விருதயத்திற் பிரம்மாவுக்கு ஈசன், அச்சுதருக்கு ஈசன்
அதிதியுடைய பிள்ளை. அவர் சர்வத்தையும் பக்ஷிக்கிறவர் உருத்திருக்கு
தனுவென்று சொன்னார் ஆகையாலும் அட்டமூர்த்தியும் உருத்திருக்கு
தனுவல்லோ அதிலே சூரியனும் தனுவல்லோ ஆகையாற் றனுவுடைத்தான
வன் சிவனென்றே யறிக ஆகையாற் சூரியமண்டல அந்தரவிர்த்தி
சாம்பசிவனே. விட்டுணுவை சூரியமண்டல நடுவில் மகரகுண்டல கேயூ
தாரியாய் கிரீடியாய் பொன்னிறத்தனுவாய் இருக்கிறவரென்று சொல்லு
கிற வசனத்துக்கு போக்கேதென்னில் சுருதிவசன மில்லாததினாலே
அவரை சூரியமண்டலத்தில் வந்தபடி தியானிக்கவேண்டுமென்றுசொன்ன
வசனம் பிரமதேவதையும் அப்படியே தியானிக்கவேண்டுமென்று அவரு
டைய புராணங்கள் சொல்லும். அது உண்மையாகக்கொள்ளப் போதாது
உண்மையானால் ஈசுரீலீலையினால் ஈசுரனைக் கண்ணைப்புதைக்கையில் சூரியன்
சந்திரன் அக்கினி நக்ஷத்திர முதலானதும் பிரகாச மற்றுப்போகையில்
அவர்களிருந்து விளக்கிவைக்க வொண்ணுமோ ஆகையால் முச்சுடருக்கு
முன்னே இருந்து பிரகாசம் பண்ணுவிக்கிறது சிவனென்றுசொன்ன சுருதி
புராண பிரமாணத்தினாலும் சூரியமண்டல அந்தரவிர்த்தி சாம்பசிவனே.
ஆகையால் பிரமாண மந்திரத்தால் உபாசியம் சாம்பசிவனேயென்று சகல
சாஸ்திர நிர்ணயம். பதினோராவது சூரியமண்டலத்தில் பிராமணர் மந்
திரத்தால் உபாசியரென்கிற லெக்ஷணம் முற்றும் சகல கன்மத்திலும்
எய்க்கிய கன்மம் பிரதானமாகையால் அந்த எய்க்கிய கன்மத்தில் உபாசிய
ரெவரோ அவரே சகல கன்மத்திலும் உபாசியரென்று சகல சாஸ்திர

நிர்ணயம். அது சாம்பசிவனென்கிறதற்குப் பிரமாணம் இரண்டாம்வேதத்திலே எய்க்கியத்துக்கு ராசா உருத்திரரென்றும் எய்க்கியபதி உருத்திரரென்றும் அநேக விடத்தில் சொல்லுகிறதினாலும் எய்க்கியத்துக்குப் பசு பிரதானமல்லோ அந்த பசுவை ரூபத்திற்கட்டுகையில் இது பசு பதி உனக்கென்றும் பின்பு அவை எடுத்து சகல தேவதைகளுக்கும் அவிர்ப்பாகங் கொடுக்கிறதினாலும் கோமலத்தை பிரதானமல்லோ அதுவும் உருத்திர சம்பந்தமென்கிற சுருதியினாலும் கௌவியம் பிரதானமல்லோ அதுவும் உருத்திரா உன்பொருட்டென்று சொல்லுகிற சுருதி வசனத்தினாலும் உருத்திரனே எய்க்கிய கர்த்தாவென்று நிர்ணயம். எய்க்கிய கர்த்தா நாராயணரென்றும் இந்திரனென்றும் சொல்லுகிற வசனங்களுக்கு போக்கேதென்னில் எய்க்கிய சொரூபம் விட்டுணு, எய்க்கியத்திற்கு பதி ருத்ரன் என்ற சுருதியினாலும் பிரம்மாவ்மிட்ட தேவரைக்குறித்து யாகம் பண்ணினாரென்னில் அவருக்கு இட்டதேவதை நாராயணரென்னில் அவருக்கு தேவதையைக் குறித்து வரா............படுத்து யாகம் பண்ணினாரென்கிற சுருதி பிரமாணத்தினாலும் தக்கனுடைய யாகத்தில் எயிக்கியத்துக்கு ராஜாவாக விட்டுணு விருக்கையில் வீரபத்திரர் பிரவேசித்தபோது தம்மையும் தேவதைகளையும் எஜமானனையும் ரக்ஷிக்கமாட்டாமற் போனதினாலும் நாராயணர் எய்க்கியத்திற்கு கர்த்தாவல்ல இந்திரனும் கர்த்தாவல்ல. எய்க்கியத்துக்கு அசுராள் ராக்ஷதாளால் விக்கினம் வராமற் காத்து அவிர்ப்பாகம் வாங்கிக்கொண்டு போவதுமாத்திரமே ராஜாவானால் நூறு அஸ்வமேத யாகம்பண்ணி இந்திரபட்டத்துக்கு வருகிறவர்களையும் தள்ளிவிட வேணுமாகையால் இந்திரனுக்கு முதன்மையல்ல. எயிக்கிய கர்த்தா ருத்திரனென்றே சகல சாஸ்திர நிர்ணயம். இதற்கு ராமபத்திர வசனமும் கிருட்டிணதேவர் வசனமும் பிராமணம். அது எது உத்தர ராமாயணத்திற் ராமபத்திரசுவாமி ராஜசூய யாகம் பண்ணவேணுமென்றதை லக்ஷ்மணர் வெகு தன்மங்கள் சொல்லி நிறுத்தினபின்பு அசுவமேத யாகம் பண்ணவென்று சுவாமி சிந்தித்து இதிகாசம் லக்ஷ்மணருக்கு சொன்னது. இளனென்கிற ராஜாவுக்கு பார்வதியம்மன் சாபத்தினாலே திரிசின்மம் வருகையில் வெகு காலஞ் சென்றபின்பு சகலரிஷிகளும் கூடி யோசனைபண்ணி மகாதேவருடைய அனுக்கிரகத்தினால் சாபவிமோசன மாகவேணுமென்று நினைத்து அவரை யெயிக்கியத்தால் உபாசிக்கவேணுமென்று சகலத்திலும் அசுவமேத யாகபலன் முக்கியமென்று உபாசித்த பின்பு சாம்பசிவன் பிரசன்னமாய் எப்போதும் மற்றபடி புருடத்துவங் கொடுத்தார். அந்த அசுவமேத யாகத்தை நாமும் பண்ணுவோமென்றார். போதாபனர் ராமா

யணத்தில் ராமபத்திரசுவாமி அசுவமேத யாகத்தால் மகாதேவரை யுபா சித்தாரென்றிருக்கையாலும் கூர்மம் பாத்மம் காந்தம் இலிங்கம் சைவமுத லான புராணங்களிலும் எயிக்கிய கர்த்தா ருத்திரனேயென்கிறதற்கு வெகு பிரமாணங்களின்ன மிருக்கையாலும் எயிக்கிய கர்த்தா ருத்திரனென்றே நிர்ணயம். உச்சிட்டபாக முருத்திரனுக்கேயென்று சொல்லுகிற வசனத் திற்கு போக்கேதென்னிற் பசுவும் கோமலத்தையும் செவ்வியமும் ருத்திர சம்பந்தமானால் மற்ற எயிக்கிய பதார்த்தங்களும் உருத்திர சம்பந்தம் சந் தேகமில்லையே உலும்பை வருகிறதெல்லாம் இராஜாவுக்கென்றே வரும் சுயம்பாகம் பண்ணினாலும் எல்லாருடனே கூடவேயிருந்து கொள்ளுவன் மிஞ்சின பதார்த்தமெல்லாம் மாமனையிலேயே கிடக்கும் அது ராஜாவினு டைய உடைமையன்றோ ஆகையால் உச்சிட்டபாகம் ருத்திரருக்கென்று சொன்னதென்றறிக ஆதியிற் பசுவைக் கட்டுகிறபோதும் கோமலத்தை பிழிகிறபோதும் செவ்வியத்தை கறக்கிறபோது முருத்திரசம்பந்தமென்று நடுவிற் றேவதைகளுடன்கூட அவிர்ப்பாகமும் மிஞ்சினது உருத்திரசம்பந் தமென்று அவிர்ப்பாகத்துக்கு தேவதைகளை அழைக்கையில் மற்றதேவதை களையெல்லாம் ஒன்றாயழைத்து ருத்ரமூர்த்தியை புறம்பாக அழைத்து ஆசனம்போட்டு கைகழுவி அவிர்ப்பாகங் கொடுக்கவென்றுஞ் சுருதி சிவ னுக்கு சொன்னாற்போல தேவதாந்தரங்களுக்கு சொல்லவேயில்லை இது வல்லாமற் பிரம்மா விட்டுணு இந்திராதிகள் சகல இருடிகள் ராஜாக்கள் அசுரர் ராக்ஷதர் மற்றுள்ளவர்களும் எயிக்கிய கன்மத்தில் உபாசித்த தலம் காசி குருக்ஷேத்திரம் ராமேச்சுவரம் கங்கை யமுனாதீர்த்தம் இந்து சரசு மானத சரசு முதலான தலமென்று சகல புராணங்களிலும் சொல்லுகிற தினாலும் பிரம்மா விஷ்ணுவினுடைய பிள்ளை தக்கன் சிவனுக்கு மாத்திரம் அவிர்ப்பாகங்கொடாத தோஷமும் அரிபிரமாதி சகல தேவதைகளுக்கு அனுகூலமாக நடந்து ராஜாவுக்கு விபரீதம்பண்ணினால் அவன் தலையோடு போகிறது சுபாவமல்லோ. ஆகையாலே யெயிக்கிய கர்த்தா ருத்திர னென்றே சகல சாஸ்திர நிர்ணயம்.

பனிரெண்டாவது முற்றும்.

(இன்னும் வரும்.)

வி. குஞ்சிதபாதம் பிள்ளை.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

விநாயகப் பிரபாவத்தில் கண்டது.

தூர்வை யாசகப் படலம்.

தொகுதி - 8 - பகுதி 5 - பக்கம் - 120 - தொடர்ச்சி

இப்பால் வீதியிற்சென்ற பிராமணராகிய விநாயகக் கடவுளானவர் அந்நகரத்தின்கண் வேதவொழுக்கங்களிற் றவறாதவனாய்த் திரிசிரனென்னும் பெயரை வகித்துக் கற்பிற்சிறந்த விரோசனையென்னும் பத்தினியோடு வாழ்ந்திருக்கின்ற ஓர் ஏழைப்பிராமணன் வீட்டினுட் பிரவேசித்தனர். அக்காலத்தில் விரோசனையென்பவள் ஏவல்செய்யக் கணேசமூர்த்தியைப் பூசித்துக்கொண்டிருந்த அத்திரிசிரன் சுவாமியைக் கண்டவுடன் விரைந்தெழுந்து எதிர்கொண்டு சாஷ்டாங்கமாகப் பணிந்து இருகரங்களையுஞ் சிரமேற்கூப்பி நின்றனன் அவன்மீது கணேசமூர்த்தி கிருபா நோக்கம் பாலித்து, அன்பனே! செல்வத்திற்சிறந்த சனகராஜன் அரண்மனைக்குச் சென்றோம், அவன் நமது பசிநோயைச் சிறிதாற்றினன், மற்றதையுந் தணித்துக்கொண்டு போமாறு உன்னிடத்திற்கு வந்தோமென்று புன்னகையோடுந் திருவாய்மலர்ந்தருளினர். அதை அவன் பத்தினியாகிய விரோசனை என்பவள் கேட்டுத் தீர்க்கத் தண்டஞ்செய்து சுவாமி! தடாக நீர் முழுவதும் அருந்தித் தணியாதிருக்கின்ற கொடுந்தாகம், அதினின்றுங் கொணர்ந்துவந்த குடிநீரால் தணியப்போகின்றதா? நேற்றையவரையில் யாசகத்தாற் கிடைத்ததைப் புசித்திருந்தோம். இத்தினம் அதுவுமின்றியிருக்கின்றோம் கணேசமூர்த்தியைப் பூசித்து மிகுந்த ஓர் அறுகுமாத்திரமன்றி வேறொன்றுமில்லையென்றனள் இவ்வாறு தாங்கள் அடைந்திருக்கின்ற வறுமைப்பாட்டினை விரோசனையுரைத்ததும் வேதியராய் வந்த விநாயகமூர்த்தி மனமிரங்கி பெண்கள் நாயகமே! அன்பில்லாத மனத்தையுடைய செல்வர்கள் கோடிதனத்தை யளித்தாலும் யாம் விரும்பேம். எதுமற்ற எளியோர்கள் அன்புடன் அளிப்பது எள்ளளவாயினும். அதுவே நமக்குமேலானதாகும். அவ்வாறு ஈவோர்க்குப் புண்ணியமும் அதனை

எற்போற்குப் புகழுமுண்டாகும். நீங்கள் புல்லை உணவாக எவ்வாறளிப்ப தென்று யோசிக்கவேண்டாம். அதுவே எனக்கு நல்லுணவாகும். ஆதலால் விரைவிற்சென்று அப்புல்லைக்கொண்டு வந்தளிப்பீர்களென்று திருவாய் மலர்ந்தனர். அவ்வாறே விரோசனை அவ்வறுகை எடுத்துவந்து நீட்ட அதனைத் தமது கரத்தினால் வாங்கி வாய்மடுத்து மென்று தின்று ஏப்பமிட்டனர். அங்ஙிமிடத்தில் கணேச மூர்த்தியினுடைய திருவருளினால் அவர்களுடைய பழையகூரை வீடானது தங்கமயமான மாளிகையாய் விட்டது. அதற்குள்ளே அன்னமுதலாகிய எல்லா வுண்டிகளும், பொன், வெள்ளி, நெல் முதலான அளவற்ற பாக்கியங்களும் நிறைந்திருந்தன. அவைகளைக்கண்ட திரிசிரனும் விரோசனையுந் திகைத்து மீட்டுந்தெளிவுற்று தங்களை யடைந்திருந்த வறுமைக்கு விடைகொடுத் தனுப்பினார்கள்.

மிதிலாபுரியினும் அதை அடுத்த நாடுகளினு மிருந்து அவ்வவர்கள் முன்னர் கொண்டுவந்திருந்த பண்டங்களெல்லாம் பின்னர் நூறுமடங்கு அதிகமாய் அவ்வவர்கள் வீட்டிலுண்டாயின. அவ்வற்புதத்தைக் கண்டவர்களெல்லாம் அதிசயமடைந்தார்கள். இப்பால் திரிசிரனும் விரோசனையும் வறுமையாற் றளர்ச்சியடைந்தாராயினும் அன்பிற் றளர்ச்சியடைதலில்லாத சத்தியசீலர்களாதலால் அவர்கள் கண்டு களிக்குமாறு தொழுநோய் கொண்டு அறுகிரந்து நின்ற அந்தணரானவர் அவ்வுருவைக் கரந்து தமது தெய்வ ரூபத்தைக்கொண்டு அறுகையுஞ் சந்திரனையுந் தரித்திருக்கின்ற சடாமகுடமும் மழுப்படை தாமரைமலர் படிகமாலை ஒற்றைக்கோடு என்னுமிவைகளைத் தாங்கிய நான்கு திருக்கரங்களும் முப்புரிநூலணிந்த மார்பும் வேதத்தை இடைவிடாது ஒலித்துக்கொண்டிருக்கின்ற சிலம்பணிந்த திருவடிகளும், மணிமுடி குண்டலம் புயகவச முதலிய ஆபரணங்களுந் தோன்றும்படியாக, அவர்களெதிரே பிரத்தியட்சமாகி நின்றனர். உடனே அவ்விருவருந் திகைத்து அன்பும் அச்சமுங்கொண்டு புட்பங்களா லருச்சனைசெய்து திருவடிகளில் சாஷ்டாங்கமாக வணங்கி அளவிறந்த தோத்திரங்கள்செய்து ஆனந்தக்கூத்தாடி எண்ணிறந்த பிறவிகடோறுஞ் செய்து முற்றிய தவத்தினுங் கிடைத்தற்கரிய ஓ! கிருபாமூர்த்தியே! தேவரீர் திருவடிகளை எளிதிற் பெற்றேமாதலால், இனி அடியேங்கள் இப்பிரபஞ்ச வாழ்க்கையை வேண்டுகிலம், தேவரீர் திருவடி நீழலிலிருக்கத்தக்க பேற்றினை அளித்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தனர். அதற்கு விநாயகக் கடவுள் அருள்சுரந்து, அன்பர்காள்! நீங்கள் அகம் பிரமமென்றெண்ணியிருக்குமிந்நாட்டரசன் காணும்படி பெருஞ்செல்வத்தோடு வாழ்ந்திருந்து

பின்னர் அன்னிய நிலைமையாகிய திருவடிப்பேறெய்துவீராக வென்று திருவாய்மலர்ந்தனர். அச்சமயத்தில்சனகராஜன் தனது அரண்மனையிலுந் தனதாளையிலடங்கியிருக்கின்ற நாடு நகர முதலாயுள்ள எல்லா விடங்களிலும் அளவற்ற செல்வங்கள் அமைந்திருப்பதை நோக்கி ஆச்சரியமடைந்து நம்மை யாசித்துவந்த அந்தணன் ஈசுரனே யாகுமென்று நிச்சயித்து உடனே விரைந்தெழுந்து, நிசிரானுடைய மனைக்குட்சென்று இருக்கு முதலாயுள்ள சதுர்வேதங்களாலு மறியப்படாத சமூகராகியும், அன்பர்களுள்ளமே ஆலயமாக வீற்றிருக்கும் பெருமானுகியபிரானின்ற விநாயக மூர்த்தியை யெதிர்கொண்டு, சாஷ்டாங்கமாகப் பணிந்தெழுந்து, இருவிழி வழியூற்றெடுப்ப ஆனந்த பாஷ்பஞ்சொரிந்து நெக்கு விட்டு நெஞ்சமுருகிக் கரங்களைச் சிரமேற்கூப்பி அறிவினைப்போன்று மறைத்துக் கொண்டிருந்த அறியாமையால் அகம்பிரமமென்று நினைந்து அகங்கரித்து அருநரகில் வீழ்ந்து மூழ்கிப்போம்படியிருந்த அடியேனை அவ்வாறு மூழ்கிப்போக வொட்டாமல் கடைத்தேறுமார்க்க மிதுவெனக் காட்டி ஆட்கொள்ளவந்த ஓ நின்மல மூர்த்தியே! தேவரீருடைய கிருபைக்கு சாஷ்டாங்க நமஸ்காரம். தேவரீர் திருவடித் தாமரைக்குச் சாஷ்டாங்க நமஸ்காரம். நாரதமுனிவர்கூறிய நன்மார்க்கங்களைச் சிறிது முணராதிருந்த சிறியேனைக் கரைசேர்க்கும் வண்ணம் எழுந்தருளிய ஓ பரஞ்சோதியே! தேவரீருடைய பெருங்கருணைக்குச் சாஷ்டாங்க நமஸ்காரம். அடியேன் மாத்திரமன்றிச் சுற்றத்தார்களும் அடியேனாளுகின்ற நாடு நகரங்களும் அவைகளிலுள்ள பதார்த்தங்களும் சுவாமிகளுக்குப்பிரீதியாகத் திருவுளங்கொண்டெழுந்தருளிய ஓ நின்மல மூர்த்தியே; தேவரீருடைய அநுக்கிரகத்துக்குச் சாஷ்டாங்க நமஸ்காரம். என்றிவ்வாறு அனந்தமுறை தோத்திரஞ்செய்து ஓ கணேசமூர்த்தியே பிரமனும் விஷ்ணுவும் தேடிக்காணக் கூடாத சிவபெருமானுடைய திருவடிகளை முன்னொரு காலத்தில் எமதருமராஜன் எதிர்த்துப் பெற்றதுபோல, அடியேன் பரப்பிரம்மத்தை மாறுபாடாக நினைத்துத் தேவரீருடைய திருவடிகளைப் பெற்றேன். இனி நின்மலமாகிய ஞானத்தை அநுக்கிரகஞ்செய்து, அடியேனைத் தெளிவிக்க வேண்டுமென்று ஜனகராஜன் பன்முறைபணிந்து வேண்டிக்கொண்டனன்.

(இன்னும் வரும்)

ஓம் சிவகணேச கந்தப்ப சபையில் ஒருவராகிய,

கி. இராஜூ கிராமணியார்,

இராஜூ விலாஸ், திருமயிலை